தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியில் ஏற்பட வேண்டிய விசேஷ உறவைக் குறித்து வேதாகமம் நமக்குக் கூறுகிறது. எல்லா மனிதரையும் சிருஷ்டித்த தேவன் அவர்களின் பிதாவாக இருக்கிறபடியால், அவருடைய பிள்ளைகள் தம்மிடம் திரும்பபடி விரும்புகிறார்.

இந்தக் கைப்பிரதி நூலானது தேவன் நமது பிதா என்பதையும், நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு தேவனுடைய குடும்பத்தில் அங்கம் வகிப்பது என்பதையும் வேதாகமம் கூறுவதை எடுத்துக் காட்டுகிறது.

GOD OUR FATHER - Tamil
1500 Copies - 2007


- இலவச மாதாந்திர வேதாகம பத்திரிக்கை
- வேதாகம தொடர் அஞ்சல் வழி கல்வி
- அருகாமையில் நடைபெறும் வேதாகம கலந்துரையாடல் வேதஆராய்ச்சி

மேல் கூறப்பட்டுள்ளவைகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு தொடர்புக்கு

**கிறிஸ்டடெ.:.ல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் 4237
பெங்களூர் 560042, இந்தியா

வேறு இடங்களுக்கு
Elsewhere:
**Printland Publishers, GPO Box 159,**
**Hyderabad A.P. 500001, INDIA**



# தேவன் நமது பிதா

மார்க் டிராபென்ஸ்டோற்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 2 |
| வேதத்தில் தேவனைப்பற்றிய வெளிப்பாடுகள் | 3 |
| யார் நமது பரமபிதா ? | 7 |
| மலைப் பிரசங்கத்தின் உபதேசம் | 9 |
| “பிள்ளை”களுக்கு ஒப்பிட்ட பாடங்கள் | 12 |
| யோவான் நற்செய்தி நூலில் பாடங்கள் | 12 |
| நாம் பிதாவின் பிள்ளைகளாவது எப்படி ? | 14 |
| யோவான் எழுதின சுவிசேஷத்தின் முக்கிய குறிப்புகள் | 14 |
| யோவான் 3ம் அதிகாரத்திலிருந்து பாடங்கள் | 15 |
| யோவான் 3:16 நற்செய்தியின் ஒரு சுருக்கம். | 17 |
| அப்போஸ்தலனாகிய பவுலின் வாக்கியங்களிலிருந்து பாடங்கள் | 19 |
| முடிவுரை | 21 |
| படிப்பிற்கான கேள்விகள் | 23 |

# தேவன் நமது பிதா

## மார்க் டிராபென்ஸ்டோற்

*''ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்''* (ஆதியாகமம் 1:1).

இந்த சில வார்த்தைகளினால் வேதம் நமக்கு தேவனை அறிமுகப்படுத்துகிறது. தேவனால் படைக்கப்பட்டதை வேதத்தின் மூலம் கற்றுக்கொள்ளமுடியும். எல்லாவற்றையும் படைத்தவர் தேவன் என்பதை வேதம் காட்டுகிறது. அவர் நம்முடைய பரமபிதா.

நாம் அவருடைய பிள்ளைகளாகவும், அவர் நம்முடைய பரமபிதாவாகவும் இருக்கதேவன் விரும்புகிறார். தேவன் நம்மை விசேஷமான குடும்பமாய் மாற்ற விரும்புகிறார். ஆனால் அது தானாக நடப்பதல்ல. நாம் அந்த குடும்பமாய் மாற விசேஷமான வழியை நியமித்திருக்கிறார். அந்த வழிக்கான வார்த்தைதான் இது.

*"அவருடைய நாமத்தின் மேல் விசுவாச முள்ளவர்களாய்*
*அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ*
*அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி,*
*அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள்,*
*இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது,*
*புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல்,*
*தேவனாலே பிறந்தவர்கள்" (யோவான் 1:12-13).*

அவர் நம்முடைய பிதா, நாம் எப்படி அவருடைய பிள்ளைகளாய் மாற முடியும் என்பதைப்பற்றி இந்த புத்தகத்தில் தெரிந்து கொள்ளப் போகிறோம்.



### வேதத்தில் தேவனைப்பற்றிய வெளிப்பாடுகள்

தேவன் தம்மைதாமே எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதை வேதாகமம் நமக்குக் கூறுகிறது. பல காலங்களினூடே தேவன் தம்மைதாமே பல விதங்களில் வெளிப்படுத்தி உள்ளார். தேவன் என்றும் மாறாதவர். எனவே காலங்களைக் கடந்து அவர் தம்மைக் குறித்து அதிகமாக சொல்லியிருக்கிறார். ஒருவகையில் வேதாகமம் விரிவாக்கப்பட்ட அந்த வெளிப்பாடுகளின் கோர்வையாகும்.

தேவன் உலகத்தை உண்டாக்கி நீண்ட காலத்திற்குப் பிறகு ஒரு விசேஷித்த மனிதனுக்குத் தரிசனமாகி அவனுக்கு ஆபிரகாம் என்று பேரிட்டு, உண்மையிலே நம்பமுடியாத பல வாக்குத்தத்தங்களைக் கூறினார். (அவற்றில் முதலாவது வாக்குத்தத்தமாக ஆதியாகமம் 12ல் கூறப்பட்டுள்ளது). அதைப்பெற்ற ஆபிரகாம் தேவன் மேல் விசுவாசம் வைத்து, தான் அறியாத தூர தேசத்திற்குச் சென்றான். தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணி, அவன் பெரிய ஜாதியாவான் என்றும், அவன் நித்திய ஜீவனோடு கூடிய நல்ல சுதந்திரத்தையும் பெறுவான் என்றும் வாக்களித்தார். கடைசியில், பெரிய வாக்குத்தத்தத்தை அவனுக்குக் கொடுத்தார். *"நான் உன் தேவனாயிருப்பேன்"* (ஆதியாகமம் 17:7). இந்த வாக்குறுதியின் படி சிருஷ்டிகர் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமானார். அவர் இஸ்ரவேல் புத்திரராகிய யாக்கோபின் சந்ததிக்கும் வாக்குறுதியின் படி தேவனானார்.

சுமார் நானூறு வருடங்களுக்குப் பிறகு ஆபிரகாமின் சந்ததியார் எகிப்து தேசத்தின் அடிமைகளாய் இருப்பதைத் தேவன் பார்த்தார். ஆனால் தேவன் தமது ஜனங்களை மறக்கவில்லை. அப்பொழுது மற்றொரு விசேஷமான மனிதனாகிய "மோசே" வெளிப்பட்டான். மோசேயிடம் தேவன் ஒரு பெரிய காரியத்தைச் செய்ய அனுப்புவதாகச் சொன்னார்.

மோசே தேவ ஜனத்தைச் சிறையிருப்பிலிருந்து விடுவிப்பதாக இருந்தது. தனது பணியை ஆரம்பிப்பதற்கு ஏற்றதாக **"நீர் யார் ?"** என்று மோசே கேள்வி கேட்டான்.

ஓர் வல்லமையுள்ள குரல் அதற்குப் பதில் உரைத்தது:

*''நான் ''இருக்கிறவராக இருக்கிறேன்'' (இருக்கப்போகிறவராக இருப்பேன்) என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்வாயாக" (யாத்திராகமம் 3:14).*

தேவன் தம்மை "யாஹ்வே"யாக வெளிப்படுத்தினார். இது ஒரு எபிரெய வார்த்தை : *"இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்''* (வெளிப்படுத்தல் 1:8). தேவன் தமது வல்லமையினாலும், அதிகாரத்தினாலும், மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார்.

இன்னும் சுமார் 500 வருடங்களுக்குப் பிறகு "எலியா" என்பவனுக்குத் தேவன் தரிசனமானார். எலியா எதிர்கால நூற்றாண்டுகளில் தன்னிகரற்ற ஒரு பெரிய தீர்க்கதரிசியாய் இருந்தான். ஒரு நாள் எலியா பயந்துப் போய் தேவ பர்வதமாகிய ஓரேப் என்னும் மலைக்குப் போனான். இது 1. இராஜாக்கள் 19ல் கூறப்பட்டுள்ளது. அங்கே அவன் ஒரு கெபிக்குள் போய்த் தங்கினான். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டானது. அப்பொழுது தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக பர்வதங்களைப் பிளக்கிறதும், கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று. ஆனாலும் அந்த காற்றிலே தேவன் இருக்கவில்லை. காற்றிற்குப் பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று. பூமி அதிர்ச்சியிலும் தேவன் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப் பின் அக்கினி உண்டாயிற்று. அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை. அக்கினிக்குப் பின் தேவனுடைய அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று.



பழைய ஏற்பாட்டிலே ஆபிரகாமுக்கும், மோசேக்கும், எலியாவுக்கும் தேவன் தம்மை வெளிப்படுத்தினார் என்பதை வாசிக்கிறோம். வேதத்தில் தேவனுடைய நிழலாட்டம் அருமையான ஆதாரங்களாக உள்ளது. அவைகள் கூட தேவன் பாவம் செய்கிற மக்களுக்கு மிகவும் தூரமாய் இருக்கிறவர், என்று வெளிப்படுத்துகிறது. நாம் அவரை நெருங்கிச் சேரவேண்டும். இந்த தேவன் மிகவும் உன்னதமானவர். தேவன் எப்பொழுதெல்லாம் வெளிப்படுகிறாரோ, அப்பொழுதெல்லாம் அவரைச் சேரமுடியாதபடி ஒருவித பயம் உண்டானது. ஆபிரகாமோடு பேசியபோது, ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து வணங்கினான். மோசே தேவனை நோக்கிப் பார்க்கப் பயந்ததினால் தன் முகத்தை மூடிக்கொண்டான். எலியா தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டான். தேவன் பரிசுத்தமான இடத்திற்கே கடந்து வருவார்.

அவர் எலியாவிடம் வெளிப்பட்டபோது, விசேஷமான வார்த்தையோடு பிற்காலத்தில் தேவன் முழுமையாக வெளிப்படும் காலம் வரும் என்று உரைத்தார்.

இன்னும் 900 வருடங்களுக்குப் பிறகு, அவருடைய சத்தம் ஜீவனாக வெளிப்பட்டது. தேவனுடைய குமாரனாகிய இயேசு மனிதனாகப் பெத்லகேம் என்னும் ஊரிலே பிறந்தார். இந்த இயேசு வந்த முக்கிய நோக்கம் என்னவெனில் யாருமே செய்ய முடியாததை தேவன் செய்வதற்காகவே அவர் வெளிப்பட்டார். அவரே உண்மையான தேவன் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தேவனைப் பிதாவாக வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு மகன் தமது பிதாவை வெளிப்படுத்த அவசியமாயிற்று.

ஜீவனுள்ள தேவனைப் பரலோக பிதாவாக வெளிப்படுத்தும் முக்கிய நோக்கத்துடன் இயேசு ஜீவித்தார் என்று

வேதாகமத்தில் அப்போஸ்தலனாகிய யோவான் தனது நற்செய்தி நூலில் முகவுரையாக எழுதினான்.

*''அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது''* (யோவான் 1:14).

இயேசு பின்பு இப்படி சொன்னார், *''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்''* (யோவான் 14:9). திரும்பவும் இன்னுமொரு வார்த்தையை சொன்னார். ''பிதா எப்படியோ, குமாரனும் அப்படியே''. யாரும் பிதாவைக் கண்டதில்லை. ஆனால் இப்பொழுது அவருடைய குமாரனைக் கண்டதினால் பிதாவின் மகத்துவமான குணலட்சணத்தைக் குமாரனாகிய இயேசுவிலே காண முடிந்தது.

ஆபிரகாம், மோசே, எலியா இவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தின தேவன் இப்பொழுது தம்மை இயேசுவாகிய குமாரனுக்குப் பிதாவாக மாத்திரம் வெளிப்படுத்தாமல், தம்மை இன்னும் தெளிவாகத் தெரியப்படுத்தினார். பிதாவை நெருங்கி கிட்டிச் சேரும்போது மனிதராகிய நாம் பிதாவிடம் வேண்டிக் கொள்ளுகிறதற்குப் பயப்படுகிற பயத்தை நீக்கும்படி இயேசு, கர்த்தருடைய ஜெபத்தில் இப்படி கூறுங்கள் என்று போதித்தார்.

*''பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக''* (மத்தேயு 6:9).

தேவன் குமாரனின் தந்தையாக இருக்கிறார். ஆனால் நமக்கும் அவர் தந்தையாக இருப்பது ஆச்சரியப்படக் கூடியதும், நம்பமுடியாததுமாய் இருக்கிறது. உண்மையில் இயேசுவின் ஊழியமானது தேவனைத் தமது பிதாவாக வெளிப்படுத்துவது மட்டுமல்ல. அதோடுகூட, நீயும், நானும் எவ்வாறு அவருடைய பிள்ளைகளாவது என்பதை உணர்த்துவதாகவும் இருந்தது.



யார் நம்முடைய பரமபிதா? நாம் பிதாவின் பிள்ளைகளாவது எப்படி? நாம் அவருடைய பிள்ளைகளென்றால் எப்படி வாழ்ந்து காட்ட வேண்டும்? இக்கேள்விகளுக்கு நாங்கள் கீழ்வரும் பகுதிகளில் விடையளிக்கின்றோம்.

## யார் நமது பரமபிதா?

தேவன் நமது பிதா என்கிற பொருளானது புதிய ஏற்பாட்டின் முக்கிய அம்சமாகும். இதற்குக் காரணம் சாதாரணமானது. அது உண்மையில் தேவ குமாரனான இயேசுவானவர் அவருடைய தந்தையை வெளிப்படுத்துவது ஆகும். ஆயினும், தேவனைப் பிதாவாகக் கொண்ட மூலப்பொருளை பழைய ஏற்பாட்டிலும் காணலாம். அங்கு நாம் 'பிதா' என்னும் மூலப்பொருளின் பிரதிபலிப்பைக் காணலாம். உதாரணமாக, 2. சாமுவேல் 7ம் அதிகாரத்தில் இந்த வாக்குத்தத்தம் இஸ்ரவேலின் மிகப்பெரிய இராஜாவான தாவீதுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் வாசிக்கிறோம்.

*''அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்''* (2. சாமுவேல் 7:13,14).

தேவனுடைய குமாரன் வரப்போகிறார் என்பதைப் பற்றி 1000 ஆண்டுகளுக்கு முன்பு தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடாகிய லூக்கா 2ம் அதிகாரத்தில் இயேசுவின் பிறப்பும், தீர்க்கதரிசனமும் உண்மை என்பது எழுதி வைக்கப்பட்டுள்ளது.

தேவன் நமது பிதா என்பதைக் குறித்துச் சங்கீதம் 103ல் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

*''தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய*

*உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்"* (சங்கீதம் 103:13-14).

தேவன் பிதாவுக்கு ஒப்பாகப் பேசப்பட்டிருந்தாலும் அவரைப் 'பிதா' என்று யாருமே அழைத்திருக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம், மோசே, எலியா போன்ற பலபேர்களிடம், தேவன் தம்மை மகிமையோடும், வல்லமையோடும் வெளிப்படுத்தியிருந்தும் பிதாவாக வெளிப்படுத்திக் காட்டவில்லை. நாம் முழுமையாக அவருடைய இந்த தோற்றத்தைப் புதிய ஏற்பாட்டில் மேலும் நன்றாக அறிந்து கொள்ள முடியும்.

இயேசு முழுமையாக தமது பிதாவை வெளிப்படுத்தியுள்ளார். இது எபிரெயர் முதல் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது:

*"பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து''* (எபிரெயர் 1:1-3).

இயேசுவும், அவருடைய பிதாவும் எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றி நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது "கரெக்டர்" என்ற கிரேக்க வார்த்தை "தத்ரூபமாக எடுத்துக் காட்டுவது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிரேக்க அகராதியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "ஒரு சிற்பியினால் செதுக்கப்பட்ட அதே வடிவத்தின் மறுரூபம்" இன்னொரு வார்த்தையில், இயேசு தமது பிதாவின் பிரதி (நகல்) ஆவார். பிதாவின் தன்மையை (ரூபம்) இயேசுவிலும் பார்க்க முடிகிறது. "கேரக்டர்" என்ற ஆங்கில வார்த்தை, கிரேக்க வார்த்தையில் தெளிவாக



உள்ளது. தெளிவாகச் சொன்னால் இயேசு பிதா இல்லை, பிதாவின் (தேவனுடைய) குமாரன் தான் இயேசு. (ஒப்பிட்டுப் பார்க்க, யோவான் 14:28, 20:17).

நாம் இயேசுவைப் பார்க்கும் பொழுது, அவரில் பிதாவை காண்கிறோம். பிதா எப்படியோ, குமாரனும் அப்படியே. இயேசு பிதாவினாலே அனுப்பப்பட்டவர். யோவான் தெளிவாக தன் நற்செய்தியில் (யோவான்) இவற்றை எழுதியுள்ளான்.

*''தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்"* (யோவான் 1:18).

நாம் இயேசுவை உற்று நோக்கும்போது, பிதாவைக் குறித்து என்ன கற்கிறோம் ? நான்கு நற்செய்தி நூல்களிலும் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்) இயேசு பேசும் பொழுதெல்லாம் அவருடைய பிதாவை (தேவனை)ப் பற்றியே பேச கேட்டிருக்கிறோம். அது பரமபிதாவின் அற்புதமான குணத்தைப் பற்றியே உள்ளது.

இயேசு இதை முக்கியமாக மூன்று இடங்களில் நமக்குக் கற்பித்திருக்கிறார். முக்கியமாக தமது பிதாவை (தேவனை)ப் பற்றி முதலில் உபதேசித்தது மலைப்பிரசங்கத்தில் (மத்தேயு 5:7) தான். இரண்டாவதாக, நான்கு நற்செய்தி நூல்களிலும் பிள்ளைகளை ஒப்பிட்டு கற்பித்துள்ளார். இறுதியாக யோவான் நற்செய்தியில் ஏராளமாகக் கூறியுள்ளார்.

## 1. மலைப் பிரசங்கத்தின் உபதேசம்

1. பிதாவின் நற்குணங்கள் அவருடைய பிள்ளைகளுக்குள் பிரதிபலிக்க வேண்டும் என்று கரிசனை காட்டுகிறார்.

   *"இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது"* (மத்தேயு 5:16).

2. தேவன் பட்சபாதமுள்ளவரல்ல, நாமும் அவரைப் போல அனைவரையும் ஒன்றாகப் பார்க்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

*''நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால், நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்''* (மத்தேயு 5:44-45).

3. பிதாவாகிய தேவன் எல்லாவற்றையும் அறிந்தவர். நாம் செய்யும் செயல் நமக்குப் பிரியமாய் அல்ல, அவருக்குப் பிரியமாய்ச் செய்ய வேண்டும்.

*''மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பதிலளிப்பார்''* (மத்தேயு 6:1,6).

4. தேவன் நம் தேவைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுகிறவர். ஆகையால், நாம் நம்மை அர்ப்பணித்து அவருக்காக வாழவேண்டும்.



*''உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். ... இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.... முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்''* (மத்தேயு 6:8,33).

5. அவர் நம் வேண்டுகோளை ஏற்று நமக்கு நல்லதையே செய்ய விரும்புகிறார்.

*''கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா ? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா ? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மை யானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா ?''* (மத்தேயு 7:7-11).

6. தேவன் (பிதா) இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நாமும் இரக்கமுள்ளவர்களாயிருக்க அவர் எதிர்பார்க்கிறார்.

*''ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்''* (லூக்கா 6:36).

## 2. ''பிள்ளை''களுக்கு ஒப்பிட்ட பாடங்கள்

1. நாம் அவருடைய பிள்ளைகளாக, அவரை நம்ப வேண்டும், அவருடைய இராஜ்ஜியத்தை அடைய வேண்டும்.

*"எவனாகிலும் சிறு பிள்ளையைப் போல் தேவனுடைய ராஜ்ஜியத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."* (மாற்கு 10:15).

2. நாம் நம்மை ஒருபோதும் நமது பிதாவுக்கு ஈடாக உயர்த்தக் கூடாது.

*"இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி, நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்."* (மத்தேயு 18:2-3).

## 3. யோவான் நற்செய்தி நூலில் பாடங்கள்

1. பிதா காட்டும் இரண்டு சிறந்த குணங்கள் கிருபையும் சத்தியமும் ஆகும்.

*''அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"* (யோவான் 1:14).

2. தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் இயேசுவையும், தம்முடைய பிள்ளைகளையும் ஒன்றாக நேசிக்கிறார்.

*''அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்''* (1 யோவான் 4:8).

*''பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார்''* (யோவான் 3:35).



*"நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிற படியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்''* (யோவான் 16:27).

3. தேவன் ஒரு போதகர்

*"அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்''* (யோவான் 5:19).

*''ஆதலால் இயேசு அவர்களை நோக்கி, நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்''* (யோவான் 8:28).

4. பிதாவானர் தமது அதிகாரத்தை வழங்கினார்.

*''அன்றியும் பிதாவைக் கனம் பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும் படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். ....பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவரா யிருக்கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவரா யிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்."* (யோவான் 5:22-26).

சாராம்சமாக பிதாவாகிய தேவனின் குணத்தை இயேசுவிலும் பார்க்க முடியும் என்பதைக் கற்றுக் கொண்டோம். பிதாவை வெளிப்படுத்தவே இயேசு வந்தார். நாம் எப்பொழுதும் இயேசுவில் பிதாவைப் பார்க்க முடியும். நமது பரமபிதா மிக அருகில் இருந்து, அவருடைய

பிள்ளைகள் மேல் அன்பு கூறுகிறார். அவர் நம்மைப் பாதுகாத்து, தொடர்ந்து அன்பு செலுத்துகிற வராயிருக்கிறார். தம்முடன் நமது முழு உறவை வளர்த்துக் கொள்ள விரும்புகிறார். இப்படிப்பட்ட ஒரு பரமபிதா நம்மிடம் கேட்கும் ஒரே கேள்வி, நாம் எப்படி அவருடைய பிள்ளைகளாக முடியும்? என்பதே.

## நாம் பிதாவின் பிள்ளைகளாவது எப்படி?

பிதாவைப் பற்றி அதிகமாக வேதத்தில் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அது நமக்கு மேலும் அதிக வல்லமையான காரியங்களை வெளிப்படுத்துகிறது.

*"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்"* (யோவான் 1:12-13).

நாம் எப்படி தேவனுடைய பிள்ளைகளாக முடியும் என்ற கேள்விக்குப் பதில் இதுவாகும். யோவான் தனது நற்செய்தியில் சொல்லியுள்ளதை நாம் வாசிக்கிறோம். யோவான் பிதாவைக் குறித்து அநேக குறிப்புகளை கூறியுள்ளான். "பிள்ளைகளை"க் குறித்தும் கூறியுள்ளான்.

## யோவான் எழுதின சுவிசேஷத்தின் முக்கிய குறிப்புகள்

✦ பிதா, பரலோகதந்தை (பரம பிதா)

✦ இயேசு பிதாவின் குமாரன்

✦ இயேசுவை விசுவாசித்தால் நாமும் அவருடைய பிள்ளைகளாக முடியும்.



பிதாவின் தன்மையின்படி அவர் பிள்ளைகளைக் கொண்டிருப்பார். யோவான் : பிதாவின் குமாரன் பற்றியும் பிறர் அவருடைய காரியங்களைச் செய்யக்கூடிய அதிகாரமுள்ள அவருடைய குமாரர்களாவது எவ்வாறு என்பது பற்றியும் கூறுகிறான்.

நாம் எப்படி அவருடைய பிள்ளைகளாக முடியும் என்று யோவான் 3-ம் அதிகாரத்தில் முக்கியமாக சொல்லியுள்ளது. இந்த அதிகாரத்தில் இயேசுவும் யூதர்களுக்கு மிக அதிகமாக முக்கியமாகவும் கற்றுக்கொடுக்கும் அதிகாரமுள்ள நிக்கொதேமுவும் பேசிய உரையாடலைக் கூறுகிறது. நாம் தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினராக முடியும் என்று மூன்றுமுறை தெளிவாக இயேசு கூறின விவரங்கள் பின்வருமாறு:

## யோவான் 3ம் அதிகாரத்திலிருந்து பாடங்கள்

✦ முதல் உரையாடல் (யோவான் 3:2-3)

நிக்கொதேமு : *நீர் நல்ல போதகர், தேவன் உம்மோடு இருக்கிறார்.*

இயேசு: *ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காணமாட்டான்.* "இராஜ்ஜியத்தில்" (இது கிரேக்க வார்த்தையில் ''வானத்திலிருந்து'' அல்லது "மறுபடியும்") *வேறொரு வகையில், தேவனுடைய பிள்ளைகள் மாத்திரம் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்க முடியும்.*

✦ இரண்டாம் உரையாடல் (யோவான் 3:4-8)

நிக்கொதேமு : *இது எப்படி ஆகும்? மனிதன் இரண்டாம் முறை "பிறக்க" முடியுமோ?*

இயேசு : *"ராஜ்ஜியத்தில்" மறுபடியும் பிறத்தல் என்பதற்குச் சிறந்தவழி ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பதாகும்.* அது என்னவென்றால், உண்மையில் ஞானஸ்நானத்தில்

இருகாரியங்கள் சம்பவிக்கின்றன. நீ தண்ணீருக்குள் முழுகி, பின்பு தண்ணீரைவிட்டு மேலே வரும்பொழுது ஆவிக்குரிய வகையில் தேவனுடைய பிள்ளையாக மறுபடியும் பிறந்து விட்டாய். தண்ணீரிலிருந்து வெளிவந்தபோது, ஆவிக்குரிய பிரகாரமாக, நீ தேவனுடைய பிள்ளையாக முதல் மூச்சு எடுக்கிறாய்.

✦ மூன்றாம் உரையாடல் (யோவான் 3:9-12)

நிக்கொதேமு : *இது எப்படி ஆகும்?*

இயேசு : *என்னுடைய வார்த்தைகளும் செயல்களும் உன்னை இந்த இரவில் என்னிடம் அழைத்து வந்திருந்தாலும், நீ இன்னும் என்னை நம்பவில்லை. உன்னதமான காரியங்களை உனக்குச் சொல்லியும், நீ என்னை விசுவாசிக்க ஆயத்தமாக இல்லை. ஆனாலும் நீ தேவனுடைய பிள்ளையாக விரும்பினால் என்னை விசுவாசித்தே ஆக வேண்டும்.*

நிக்கொதேமு இஸ்ரவேலில் கனம் பெற்ற ஒரு போதகன். அவன் இயேசுவிடம் வந்தபோது, தன்னில் ஒன்றுமில்லாத வெறுமையுடன் இருந்தான். ஏனெனில் அவன் உண்மையில் இன்னும் தேவனுடைய பிள்ளையாக மாறியிருக்க வில்லை. அவன் அறிவில் மிகச் சிறந்தவன், ஆனால் தனது பாவங்களைப் போக்க தேவன் வல்லமையுள்ளவர் என்று முழுமனதாய் நம்பவில்லை, நூற்றாண்டு காலங்களாக யூதர் தேக்கி வைத்திருந்த சட்டதிட்டங்களையே அவன் சார்ந்திருந்தான்.

இங்கு ஒரு மிக முக்கிய உண்மை அடங்கி உள்ளது. தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு அம்சத்தையும் நம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் நாமும் அவர் ஜீவனுள்ள தேவன் என்பதை முழுமையாய் நம்பாவிடில் நாமும் நிக்கொதேமுவைப் போல தேவனுடைய பிள்ளையாக மாறாமலிருப்போம். நாம் ஒருபோதும் விசுவாசத்தை அறிவுக்கு நிகராகவும் இகழ்வாகவும் நினைத்து குழப்பமடையக் கூடாது.



நமது விசுவாசத்துக்கு முன்பு அறிவில் வளருவது அவசியம் என்றாலும், விசுவாசத்துக்குப் பதிலாக அறிவைப் போற்றக் கூடாது.

முழு வேதத்தில் “நம்பிக்கை” என்ற சிறந்த வரையறை பற்றி நீதிமொழிகள் புத்தகத்தில் சிறந்த சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன:

*‘‘உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார். நீ உன்னை ஞானியென்று எண்ணாதே, கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு, அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்’’* (நீதிமொழிகள் 3:5-8).

தேவனுடைய பிள்ளையாகிறது, இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது முதல் ஆரம்பமாகிறது. ஆனால் அது அங்கு முடிவதில்லை. நமது விசுவாசம் நம்மை ஞானஸ்நானம் பெறத் தூண்ட வேண்டும். இவ்வாறு பூரணமாக நாம் விண்ணுலக ராஜ்யத்தில் பிறப்போம்.

## யோவான் 3:16 நற்செய்தியின் ஒரு சுருக்கம்.

இந்த 21-ம் நூற்றாண்டிலே நாம் கவனிக்க வேண்டிய ஒன்றை இயேசு, நிக்கொதேமுவின் உரையாடலில் மிகவும் பிரயோஜனமானது எனக் கூறினார். இதுவே சுருக்கமாக யோவான் 3:16ல் கொடுக்கப்பட்டது. அதை “நற்செய்தியின் சுருங்கிய பிரதி” என்று சில வேத பண்டிதர் கூறுவதுண்டு. நாம் தேவனுடைய குடும்பத்தில் சேர்க்கப்பட இது மிகவும் தேவையான ஒரு படியாக உள்ளது.

***“தேவன் உலகத்தை இவ்வளவாய் நேசித்தார்”.*** நம் பரலோக பிதாவின் நோக்கம், உண்மையான தகப்பனாய், உண்மையாய் அன்பு செலுத்துவதே. அவருடைய ஆழமான

அன்பினால் நம்மைப் பாதுகாத்துப் போஷிக்கிறார். எல்லாத் தேவைக்கும் மேலாக, மரண ஆக்கினையினின்று நம்மை விடுவிக்கும் வழியை ஏற்படுத்தியுள்ளார். இது அவருடைய அன்பை எடுத்துக் காட்டுகிறது.

***"தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார்"*** இரட்சிப்பு தேவனிடமிருந்து கிடைக்கிறது. அது ஊதியமாக அல்ல. தேவன் தரும் ஈவாக இருக்கிறது.

***"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ"*** அவரில் விசுவாசம் வைக்காமல் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது. அவருடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தை அவர் நிறைவேற்றுவார் என்று நாம் முழுமையாய் நம்பவேண்டும். நமது விசுவாசத்தினாலேயே நீதிமான்களாகிறோம். அதற்கென்று உறுதியான நம்பிக்கையுடன் நாம் இருக்க வேண்டும்.

***"அவருக்குள் வைக்கிற விசுவாசம்"*** இதில் "ஐ" "இல்" என்ற அடைமொழிகள் கிரேக்க பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்படுகையில், புதிய ஏற்பாட்டில், ஏறக்குறைய அநேக வேதவாக்கியங்களில், 'குள்' என்ற அடைமொழியாகவே உள்ளது. ஒரு நேரடி மொழிபெயர்ப்பு அழுத்தமாக இந்த அடைமொழியை *''அவருக்குள் விசுவாசம் வைக்கிற ஒவ்வொருவரும்....."* என்று மொழிபெயர்த்துள்ளது. அதே சமயம் இந்த சிறு அடைமொழியின் முக்கியமான விரிவுரை நம்பிக்கையும், கல்வியினால் பெற்ற அறிவும் வித்தியாசமானது, என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. நிக்கொதேமுவைப்போல கல்வியினால் பெற்ற அறிவில் பலமுள்ளவர்களாக நாம் காணப்பட்டாலும், நாம் தேவனுடைய குமாரனில் முழு நம்பிக்கை இல்லாதிருக்கக் கூடும். நமது விசுவாசம் நம்மை ஞானஸ்நானம் எடுக்கும்படி ஏவவேண்டும். இப்படி நீருக்குள் மூழ்கி மறுபடி பிறராவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தை நாம் காண முடியாது.

***"கெட்டுப் போகாமல்"...*** நமக்குக் கிறிஸ்து இல்லாமல்,



மரணத்தின் கூராகிய பாவத்தினின்று விடுதலை இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

***"நித்திய ஜீவனை அடையும் படிக்கு"*** *தேவனுடைய பிள்ளை தேவனுடைய வீட்டில் வாழ வேண்டும். அந்தப் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைக் கண்டேன் என்று அப்போஸ்தலனாகிய யோவான் கண்ட இறுதி தரிசனமாகத் தனது மரணத்துக்கு முன்பு கூறியுள்ளான்* (வெளிப்படுத்தல் 21:1-4 பார்க்கவும்.)

யோவான் எழுதின நற்செய்தியின் சுருக்கம் இதுவே:

- ✦ *இயேசு தேவனுடைய குமாரன்.*
- ✦ *பிதாவைப் போல தேவன் நம்மில் அன்பு கூருகிறார்.*
- ✦ *அவர் தமது குமாரனைப் பாவ விமோசனத்திற்காக அனுப்பினார்.*
- ✦ *பாவ நிவாரணம் பெறும்படி நாம் இயேசுவுக்குள் விசுவாசம் வைக்க வேண்டும்.*
- ✦ *நாம் ஆவியினாலும், ஜலத்தினாலும் ஞானஸ்நானத்தின் மூலம் மறுபடி பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாது.*
- ✦ *நாம் விசுவாசித்து, ஞானஸ்நானத்தின் மூலம் மறுபடி பிறப்பதினால், அவருடைய பிள்ளையாக வேண்டும்.*

## அப்போஸ்தலனாகிய பவுலின் வாக்கியங்களிலிருந்து பாடங்கள்

யோவான் எழுதியதிலிருந்து வேறுபட்ட செய்தி இது. அநேக பொதுவான முக்கியமான காரியங்களைப் பவுல் எழுதியுள்ளான். நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாற வேண்டும் என்பதே பவுலின் தனிப்பட்ட காரணங்களில் ஒன்று. தர்சு பட்டணத்து சவுல் மறுபடி பிறந்து, பவுல் ஆனான். ஆபிரகாமின் சந்ததியில் தோன்றி, நீதியின் கிரியைகள் மூலம் ஒருவன் நீதிமானாகிறான் என்ற அவன் கொள்கையை

கடைபிடித்து வந்தவன். ஆனால் தேவனுடைய பிள்ளையாவது எல்லா வகையிலும் வேறுபட்டு இருந்ததை அவன் கண்டான். அதுவே தேவனுடைய குமாரனில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் ஆரம்பமான வாழ்க்கையும், தேவனுடைய கிருபையை முன்னிட்டு கிடைக்கும் இரட்சிப்பும் ஆகும்.

*"... இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே, அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே, 'ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்' என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படி யென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள். ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்"* (ரோமர் 9:6-8,16).

கலாத்தியர் 3ல் பவுல் ஞானஸ்நானத்தின் அவசியத்தை அழுத்தமாக கூறினான். தேவனுடைய குடும்பமாகும் படி சரீர பிறப்பிலிருந்து மாறுவதன் முக்கிய உண்மை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. தேவகுமாரனைப் பற்றும் விசுவாச சந்ததியார் தேவனுடைய பிள்ளைகளாக்கப்படுகிறார்கள்.

*"அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ, அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. மேலும், தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னதாகக் கண்டு: 'உனக்குள் சகலஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்' என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது. அந்தப்படி விசுவாச மார்க்கத்தார், விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்"* (கலாத்தியர் 3:6-9).

*கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசிக்கிறவர்களுக்கு அளிக்கப்படும்படி*



*வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப் போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே"* (கலாத்தியர் 3:22-27).

## முடிவுரை

நம்முடைய பரமபிதா, நாம் எப்படி அவருடைய பிள்ளைகளாக முடியும் என்பவைகளைப் பற்றி வேதத்தில் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார். அந்த ஒழுங்கு ஆச்சரியப்படும் வகையில் விளங்கக் கூடியதாக உள்ளது. அவருடைய குமாரனைக் கவனித்து செவிகொடுப்பதன் மூலம் கற்றுக்கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்திற்குள்ளான ஞானஸ்நானத்தினால் நாம் மறுபடியும் பிறக்கும்போது அவருடைய ராஜ்யத்திற்குள்ளாகிறோம். இயேசு தேவனுடைய குடும்பத்தாரைச் சேர்க்கும்படி வரும்வரை, நாம் நம் வாழ்நாளெல்லாம் நம்பிக்கை நிறைந்து வாழ்வோமாக.

- ✤ பிதாவின் பிள்ளைகளாகும் போது, அதில் அவருடைய பெருத்த வல்லமை உள்ளது. அப்படிப்பட்ட சிலாக்கியத்தை நாம் சுலபமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி பூமியில் நமக்கு நித்திய ஜீவன் உண்டு.
- ✤ பிதாவின் பிள்ளைகளாகும்படி நாம் இயேசுவுக்குள்

விசுவாசம் வைக்க வேண்டும். நாம் அவரைப்பற்றி அறிவதைவிட விசுவாசிப்பது மிக அவசியம். அதாவது தேவனை முழு இருதயத்தோடு மனதிலும் உள்ளத்திலும் விசுவாசிக்க வேண்டும். அவர் மேல் உள்ள நம்பிக்கையை அனுதினமும் நாம் எடுக்கும் அமைதியான தீர்மானங்களில் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். நாம் அவரைப்பற்றிப் பெறுகின்ற அறிவானது நம்மைத் தினமும் நம்முடைய செயல்களிலும் உறுதிபடுத்தவேண்டும்.

✤ பிதாவின் பிள்ளைகளாகும் படி, நம்முடைய விசுவாசம் நம்மை ஞானஸ்நானம் எடுக்க வழிநடத்துவது அவசியம். அதன் மூலம் பிதாவின் குடும்ப அங்கமாக நாம் பிறப்பதின் அடையாளமாக அது விளங்குகிறது.

✤ பிதாவின் பிள்ளைகளாகும்படி அவருடைய அன்பும் கிருபையும் உபகரணமாக உள்ளது. அதை ஊதியமாகப் பெறும்படி நாம் எதையும் சாதிக்க வேண்டியதில்லை. மறுபடியும் பிறக்கிற நாம் இரத்தத்தினாலுமல்ல, மாம்சத்தினாலுமல்ல, மனித சித்தத்தினாலுமல்ல; தேவனுடைய கிருபையினாலே பிறக்கிறோம். பவுலும், நிக்கொதேமுவும் உலக சம்பந்தப்பட்ட வேலையில், தங்களுடைய வாழ்நாள் முழுவதும் நேர்மையாய் வாழ்ந்தார்கள், அவர்கள் கற்றுக் கொண்டது என்னவெனில், நம்முடைய சொந்த கிரியைகளினால் தேவனுடைய குடும்பத்தில் சேரமுடியாது என்று தெரிந்து கொண்டதுடன், நமக்கும் அதைப் பாடமாக்கினார்கள். அதற்குப் பதிலாக, தொடக்கமுதல் முடிவுவரை அவருடைய கிருபையும், கிறிஸ்துவிற்குள்ளான விசுவாசம் நமக்கு அவசியமானது. அதன் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் புதிய நாமம் (பெயர்) - 'பிதாவின் பிள்ளை'கள் என்பதாகும்.

**மார்க் டிராபென்ஸ்டோற்**
**கான்சஸ், மிசௌரி, அமெரிக்கா.**



**படிப்பிற்கான கேள்விகள்**

1. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய குணலட்சணம் எப்படி வெளிப்பட்டது? 'யாஹ்வே' என்ற நாமம் (பெயருக்கு) அர்த்தம் என்ன? ஆயினும் இந்த நாமம் (பெயர்) தேவன் மாறாதவர் என்பதை காலங்களினூடே தம்மை வெளிப்படுத்தியதிலிருந்து நாம் எப்படி அறிந்து கொள்ள உதவுகிறது?
2. ஆபிரகாமுக்குத் தேவன் பல வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். அதில் மிகப் பெரியது எது?
3. தேவகுமாரனாகிய இயேசுவின் குணம், செய்கை, போதனைகளிலிருந்து நாம் கற்றுக் கொண்ட பிதாவின் சிறப்பான குணலட்சணம் என்ன? விளக்கம் கூறுக.
4. தேவனுடைய பிள்ளைகளாவதற்கு நாம் செய்ய வேண்டிய முதல்படி என்ன?
5. "தேவனால் பிறத்தல்" என்பதன் அர்த்தம் என்ன?
6. நீ தேவனுடைய பிள்ளையாக மாறினால், உன்னுடைய வாழ்க்கையை எப்படி வாழவேண்டும்?

இலவச வேதவாசிப்புத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு எழுதுங்கள்.

**கிறிஸ்டடெ்ஃல்பியன்ஸ்**
**தபால் பெட்டி எண் 535**
**ஃபிரேசர் டவுன், பெங்களூர் 560005, இந்தியா**

நூல் வெளியிட்டு அச்சிட்டோர்:
Elsewhere:
**Printland Publishers, GPO Box 159,**
**Hyderabad A.P. 500001, INDIA**

| | |
|---|---|
| The Communications and Literature requests from Readers in Karnataka, Kerala & Tamilnadu | கர்நாடகம், கேரளா, மற்றும் தமிழ்நாடு பொது தொடர்பு விலாசம் |
| **The Christadelphians,**<br>P.O. Box 4237<br>Bangalore - 560042. INDIA. | **கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**<br>தபால் பெட்டி எண் **4237**<br>பெங்களூர் **560042**<br>இந்தியா |
| <u>**Elsewhere :**</u> | <u>இதர மாநிலங்கள்:</u> |
| **The Christadelphians,**<br>G.P.O. Box 159,<br>Hyderabad, A.P. 500001<br>India | **கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**<br>தபால் பெட்டி எண் **159**<br>ஐதராபாத், ஆந்திரா **500001**<br>இந்தியா |
| **The Christadelphians,**<br>P.O. Box 60,<br>Negombo - 11500,<br>SRI LANKA | **கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**<br>தபால் பெட்டி எண் **60**<br>நெகொம்போ - **11500**<br>ஸ்ரீலங்கா |
| **The Christadelphians,**<br>P.O. Box 9052,<br>Banani, DAKA - 1213<br>BANGLADESH | **கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**<br>தபால் பெட்டி எண் **9052**<br>பனானி, டாக்கா - **1213**<br>பங்களாதேஷ் |